ஏற்கனவே உறுதி அளித்தபடி

பி.எம்.ஸ்ரீ திட்டத்தில் தமிழ்நாடு கையெழுத்திட வேண்டும்: மு.க.ஸ்டாலினுக்கு மத்திய கல்வி மந்திரி கடிதம்

புதுடெல்லி, ஆக.31–

ஏற்கனவே உறுதி அளித்தபடி பி.எம்.ஸ்ரீ திட்ட ஒப்பந்தத்தில் தமிழ்நாடு கையெழுத்திட வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் கடிதம் எழுதி உள்ளார்.

நாடு முழுவதும் அரசு பள்ளிகளை தரம் உயர்த்துவதற்காக 'பி.எம்.ஸ்ரீ' திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. 14 ஆயிரத்து 500 பள்ளிகளை தரம் உயர்த்த திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் 18 லட்சம் மாணவர்கள் பலன் அடைவார்கள்.

இந்த பள்ளிகள், புதிய கல்விக்கொள்கைக்கு ஏற்ப முன்மாதிரி பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.

முதல்கட்டமாக, 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 6 ஆயிரத்து 448 பள்ளிகளை தரம் உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே, தமிழ்நாடு பள்ளி கல்வித்துறைக்கு மத்திய அரசு தர வேண்டிய நிதியை அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதற்கு தமிழக அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

நடப்பு 2024–2025 கல்வி ஆண்டில் பி.எம்.ஸ்ரீ திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதாக கடந்த மார்ச் 15ந் தேதி தமிழ்நாடு அரசு உறுதிமொழி அளித்திருந்தது.

அந்த உறுதிமொழியை பெற்றுக்கொண்ட பிறகு, மத்திய பள்ளிக்கல்வி துறை, ஒரு வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பிவைத்தது. ஆனால், அதற்கு பதிலாக ஒரு திருத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியது.

அதில், புதிய கல்விக்கொள்கையை அமல்படுத்துவது தொடர்பான முக்கிய பத்தி நீக்கப்பட்டு இருந்தது.

கையெழுத்திட வேண்டும்

புதிய கல்விக்கொள்கையுடன் இணைந்த சமக்ர சிக்ஷா திட்டத்தை தமிழ்நாடு அரசு அமல்படுத்தி வருகிறது.

அதுபோல், புதிய கல்விக்கொள்கையின் அனைத்து அம்சங்களையும் தமிழ்நாடு அமல்படுத்துவது நல்லது.

பள்ளிகளின் தரத்தை மேலும் உயர்த்த பி.எம்.ஸ்ரீ திட்டத்தை தமிழ்நாடு ஏற்றுக்கொள்வது அவசியம். சிறப்பான பள்ளிக்கல்வி சேவையை பெற அரசு பள்ளிகளை முன்மாதிரி பள்ளிகளாக பி.எம்.ஸ்ரீ திட்டம் மேம்படுத்தும். எனவே, ஏற்கனவே உறுதி அளித்தபடி பி.எம்.ஸ்ரீ திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பட்டதாரி இளைஞர்கள் வேளாண் தொழிலை தொடங்கினால் ரூ.1 லட்சம் அரசு மானியம்

சென்னை, ஆக.31–

வேளாண் சார்ந்த தொழிலை பட்டதாரி இளைஞர்கள் தொடங்கினால் அவர்களுக்கு வங்கிக்கடனுடன் ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்பட இருக்கிறது.

விவசாயத்தின் மீது இளைஞர்களுக்கு ஆர்வத்தை அதிகரிக்கவும், விவசாயத்தை மேம்படுத்தவும் பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்தில் அரசு மானியம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறது. இதற்காக பட்டதாரி இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழிலை தொடங்கினால் ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்படும் என்று வேளாண் பட்ஜெட்டில் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டில் 100 இளைஞர்களுக்கு வங்கிக்கடனுடன், தமிழக அரசின் வேளாண்மைத்துறை சார்பில் ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்பட இருக்கிறது. இந்த திட்டத்திற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டம் குறித்து வேளாண் உற்பத்தி துறை கமிஷனர் மற்றும் முதன்மை செயலாளர் அபூர்வா கூறியதாவது:

வேளாண் பட்டதாரி மட்டுமல்லாமல், எந்த பட்டதாரியாக இருந்தாலும் விவசாயம் சார்ந்த தொழிலை கொண்டு இருந்தால் அவர் மானியம் பெற தகுதியுடையவர் ஆவார். அவர் வேளாண் சார்ந்த தொழிலை தொடங்க வேளாண் உட் கட்டமைப்பு நிதியில் விரிவான திட்ட அறிக்கையை கொடுத்து விண்ணப்பித்தால், அவருக்கு வங்கியில் இருந்து கடன் பெற உதவி செய்து 3 சதவீத வட்டி மானியம் பெறவும் உதவி செய்யப்படும்.

இதுதவிர அவர் தொடங்க போகும் தொழிலை பரிசீலித்து ரூ.1 லட்சம் மானியமும் வழங்கப்படும். வேளாண் சார்ந்த தொழிலை தொடங்க விரும்புபவர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள விவசாயத்துறை இணை இயக்குனரிடம் விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட கலெக்டர் மற்றும் விவசாய அதிகாரிகளை கொண்ட குழு இதை பரிசீலித்து தகுதியுள்ளவர்களின் பட்டியலை அரசுக்கு அனுப்பும்.

அரசின் வேளாண்மைத்துறை அந்த விண்ணப்ப பட்டியலை பரிசீலித்து அவர்களுக்கு ரூ.1 லட்சத்திற்கான மானியத்தை வழங்கும். இந்த ஆண்டிற்கு 100 பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

இவ்வாறு அபூர்வா கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புவோர் 21 முதல் 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவராக இருக்க கூடாது.

இந்த திட்டத்தில் பயன் பெற விரும்பும் பட்டதாரிகள் பிரதமரின் வேளாண் உள்கட்டமைப்பு நிதியின் (ஏ.ஐ.எப்.) கீழ் அனுமதிக்கக் கூடிய திட்டங்களின் அடிப்படையில் தொழில்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் குடும்பத்திற்கு ஒரு பட்டதாரி மட்டுமே நிதி உதவி பெற தகுதி உடையவர் ஆவார். இந்த திட்டத்தில் விண்ணப்பிக்க 10 மற்றும் 12ம் வகுப்பு கல்வி சான்றிதழ், பட்டப்படிப்பு சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்குப் புத்தகம், வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம், தொழில் குறித்த விவரங்கள் ஆகியவற்றை வட்டார வேளாண்மை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த திட்டம் தொடர்பான மேலும் விவரங்கள் வேளாண்மைத்துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் மேற்கு ஒன்றியம், தேவலாபுரம் ஊராட்சியில், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர். வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.சி.வீரமணி பங்கேற்று கழக நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழக செயலாளர்களிடம் கழக புதிய உறுப்பினர் அடையாள உரிமை சீட்டுகளை வழங்கினார். உடன் கழக அம்மா பேரவை துணை செயலாளர் எ.டில்லிபாபு, நகர கழக செயலாளர் எம்.மதியழகன், வேலூர் மண்டல தகவல் தொழில்நுட்பு பிரிவு இணைச்செயலாளர் வி. கோபிநாத், மாவட்ட சார்பு அணி செயலாளர்கள் இ. வெங்கடேசன், கே. எம் சங்கர், ஒன்றிய கழக நிர்வாகிகள் வேலுமணி, குமார். ஐயப்பன், அன்பரசன், கழக நிர்வாகிகள் ஸ்ரீதர், கராத்தே மணி, ரஞ்சித் குமார் , தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் ஆனந்தபாபு, ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி தனியார் மருத்துவக்கல்லூரியின் 100 எம்.பி.பி.எஸ். இடங்களை திரும்பப் பெற்றது தேசிய மருத்துவ ஆணையம்

சென்னை, ஆக.31–

கன்னியாகுமரியில் இயங்கும் தனியார் மருத்துவக்கல்லூரியின் 100 இடங்களை, தேசிய மருத்துவ ஆணையம் திரும்ப பெற்றது. இந்த கல்லூரியில் 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டில் சேர்ந்த 5 மாணவர்களுக்கு வேறு கல்லூரிகளில் 'சீட்' வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரிகளில் உள்ள எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ் படிப்புகளுக்கான 2024–25ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை பொதுப்பிரிவு கலந்தாய்வு ஆன்லைன் மூலம் கடந்த 21ந்தேதி தொடங்கியது.

முதல்கட்டமாக, அரசு ஒதுக்கீடுக்கான பொதுப்பிரிவு தரவரிசை பட்டியலில் ஒன்று முதல் 28 ஆயிரத்து 819 இடங்கள் வரை பிடித்த மாணவர்கள், நிர்வாக ஒதுக்கீடு தரவரிசை பட்டியலில் ஒன்று முதல் 13 ஆயிரத்து 417 இடங்களை பிடித்த மாணவர்கள், தங்களுக்கு விருப்பமான கல்லூரிகளை தேர்வு செய்ய கடந்த 27ந்தேதி மாலை 5 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிறகு, கடந்த 28ந்தேதி, மருத்துவப்படிப்பு இடங்கள் ஒதுக்கீடு செய்வதற்கான பணிகள் தொடங்கின.

விருப்ப கல்லூரிகளை அரசு ஒதுக்கீடு இடங்களில் தேர்வு செய்த 7 ஆயிரத்து 628 மாணவர்களுக்கான தற்காலிக ஒதுக்கீடு ஆணைகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. இந்த நிலையில், அந்த மாணவர்களுக்கான இறுதி ஒதுக்கீடு ஆணை நேற்று வெளி யிடப்பட்டது. மாணவர்கள் https://tnmedicalselection.net என்ற இணையதளத்தில் இறுதி ஒதுக்கீடு ஆணை விவரங்களை அறிந்து கொள்ளலாம். மொத்தம் 7 ஆயிரத்து 568 மாணவர்களுக்கு மருத்துவப் படிப்புக்கான இறுதி ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளன. இந்த மாணவர்கள், தங்கள் தேர்வு செய்த கல்லூரிகளில் வருகிற 5ந்தேதி மாலை 5 மணிக்குள் சேர வேண்டும் என்று மருத்துவக்கல்வி இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

இந்த சூழலில், தேசிய மருத்துவ ஆணையத்திடம் இருந்து தமிழ்நாடு மருத்துவ மாணவர் சேர்க்கை குழுவுக்கு நேற்று கடிதம் ஒன்று வந்துள்ளது. அதில், 'கன்னியாகுமரி மருத்துவ திட்ட ஆராய்ச்சி மையக்கல்லூரி நில விவகாரம் தொடர்பாக, டெல்லி ஐகோர்ட்டில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அந்த கல்லூரியில் உள்ள 100 இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நிறுத்தி வைக்கப்படுகிறது. தேசிய மருத்துவ ஆணையத்தின் அடுத்த அறிவிப்பு வரும் வரை அந்த கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடத்த வேண்டாம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து, அந்த தனியார் கல்லூரியின் மொத்த இடங்கள் திரும்ப பெறப்பட்டுள்ளது. முன்னதாக, இந்த கல்லூரிகளில் 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டில் 5 அரசு பள்ளி மாணவர்கள், மருத்துவப்படிப்புக்கான இடங்களை பெற்றுள்ளனர். தற்போது, அவை திரும்ப பெறப்படுவதால், அந்த 5 மாணவர்களுக்கும் வேறு கல்லூரி யில் மருத்துவப்படிப்பு இடங்கள் ஒதுக்கீடு செய்யும் நடவடிக்கையில் மருத்துவக்கல்வி இயக்குனரகம் ஈடுபட்டுள்ளது. பொதுப்பிரிவு கலந்தாய்வில் இந்த கல்லூரியை அரசு ஒதுக்கீட்டில் 60 மாணவர்களும், நிர்வாக ஒதுக்கீட்டில் 35 மாணவர்களும் தேர்வு செய்து தற்காலிக ஒதுக்கீடு ஆணை பெற்றிருந்தனர். அந்த இடங்கள் திரும்ப பெறப்பட்டு, இறுதி ஆணை பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

நவம்பர் 12ந் தேதி ஏர் இந்தியாவுடன் 'விஸ்தாரா' விமான நிறுவனம் இணைகிறது

புதுடெல்லி, ஆக.31–

ஏர் இந்தியாவுடன் நவம்பர் 12ந் தேதி 'விஸ்தாரா' விமான நிறுவனம் இணைகிறது. விமானங்களும், ஊழியர்களும் ஏர் இந்தியாவுக்கு மாற்றப்படுகிறார்கள்.

டாடா குழுமமும், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனமும் இணைந்து கூட்டாக 'விஸ்தாரா' என்ற பெயரில் கடந்த 2015ம் ஆண்டில் இருந்து விமானங்களை இயக்கி வருகின்றன. இதற்கிடையே, கடந்த 2022ம் ஆண்டு ஜனவரி மாதம், பொதுத்துறை நிறுவனமாக இருந்த ஏர் இந்தியாவை டாடா குழுமம் விலைக்கு வாங்கியது. அதைத்தொடர்ந்து, அதே ஆண்டு நவம்பர் மாதம், விஸ்தாரா நிறுவனம் ஏர் இந்தியாவுடன் இணையும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த இணைப்புக்காக சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம், ஏர் இந்தியாவில் ரூ.2 ஆயிரத்து 59 கோடி முதலீடு செய்யும். இணைப்புக்கு பிறகு, ஏர் இந்தியாவில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் 25.1 சதவீத பங்குகளை வைத்திருக்கும். ஏர் இந்தியாவில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் அன்னிய நேரடி முதலீட்டுக்கு மத்திய மந்திரி சபை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இதைத்தொடர்ந்து, ஏர் இந்தியாவுடன் நவம்பர் 12 ந் தேதி விஸ்தாரா இணையும் என்று நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அத்துடன், விஸ்தாராவின் விமானங்களும், ஊழியர்களும் ஏர் இந்தியாவுக்கு மாற்றப்படுவார்கள். விஸ்தாரா விமானங்களின் எண்கள், ஏர் இந்தியா விமான எண்களாக மாற்றப்படும். நவம்பர் 12ந் தேதி அல்லது அதற்கு பின்பு விஸ்தாரா விமானங்களில் பயணம் செய்வதற்கு விஸ்தாரா இணையதளத்தில் பயணிகள் முன்பதிவு செய்ய முயன்றால், அவர்கள் தாமாகவே ஏர் இந்தியா இணையதளத்துக்கு திருப்பிவிடப்படுவார்கள். செப்டம்பர் 3ந் தேதியில் இருந்து இந்த மாற்றம் அமலுக்கு வருகிறது என்று ஏர் இந்தியா தலைமை செயல் அதிகாரி கேம்பல் வில்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திரு. C.S.ஷ்யாம் சுந்தர், த/பெ.திரு. சந்திரசேகர், எண்.592, புது எண்.840, P.H.ரோடு, அரும்பாக்கம், சென்னை–600 106 இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால் எங்களது சொத்தான பிளாட் எண்.404, பிளாக் எண்.A, 4வது தளம், விஸ்தீரணம் 1844 சதுர அடிகள் உள்ள 'கீதாஞ்சலி' மற்றும் ஒரு மூடிய கார் பாக்கிங் உள்ளிட்ட பிரிபடாத பாக மனை 874 சதுர அடி உள்ள கீதாஞ்சலி காலனி, 7வது அவின்யூ, அண்ணா நகர் மேற்கு, சென்னை–600 040 சர்வே எண்கள். 185 (பார்ட்) 186 (பார்ட்) & 197 (பார்ட்) பாடி கிராமம் & S.No.221 (பார்ட்) கோயம்பேடு கிராமம், தற்பொழுது திருமங்கலம் கிராமம் சர்வே எண்.141 (பார்ட்), 142 (பார்ட்), 152 (பார்ட்) வில்லிவாக்கம் கிராமம் @ அண்ணா நகர் விஸ்தீரணம் 69, 432 சதுர அடிகள் (As per orientation sketch) என்பதை நானும் எனது மனைவியும் 14.08.2024 தேதியிட்ட விற்பனை ஆவணம் in Doc No.5773/2024 before SRO Villivakkam என்ற பத்திரம் மூலம் வாங்கினோம். மேற்கண்ட சொத்திற்காக M/s. HDFC Limitedடிடமிருந்து ஒரு NOCயும் வாங்கினோம். தற்பொழுது மேற்கண்ட அசல் NOCஐ தான் சட்ட நிகழ்வுகளுக்காக பயணம் செய்யும்போது தவற விட்டு விட்டார். மேற்கண்ட அசல் விற்பனை ஆவணத்தை கண்டெடுக்கும் நபர்கள் இந்த அறிவிப்பிட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் தவறாமல் கீழ்கண்ட முகவரிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

R.RAMESH CHANDER, Advocate,
No.43/11, Srinivasaperumal Koil 1st Street,
Thiruvottiyur, Chennai–600 019, Mobile No.: 98410 18689,
E–Mail: r.rameshchander@gmail.com

பொது அறிவிப்பு

ராமலிங்கம் ஆகிய என் பெயருக்கு (ஆதார் எண். 2844 3432 6816) தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய தலைவர் 11.11.1988 அன்று ஒரு ஒதுக்கீட்டு செய்யப்பட்ட சத்தியவாணி நகர் திட்டப்பகுதியில் கதவு எண்.120 மற்றும் மனை எண்.266, சத்தியவாணி நகர் திட்ட ஒதுக்கீட்டு ஆணையும் நான் பணம் செலுத்தியதற்கான ரசீதுகளும், ஆக மொத்தம் 25 பேப்பர்களையும் நான் வீடு மாற்றம் செய்யும் சமயத்தில் மொத்தமாக வைத்திருந்த தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஒதுக்கீட்டு ஆணையும், பணம் செலுத்தியற்கான பல ரசீதுகளும் நாங்கள் வீடு மாறும் சமயத்தில் தொலைந்து விட்டது. எனவே அந்த சான்றிதழ்களை கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரிக்கு அல்லது தொலைபேசி மூலம் தெரிவிக்கவும். இந்த அறிவிப்பு கண்ட 10 (பத்து) நாட்களுக்குள் அசல் ஒதுக்கீடு ஆணையும் மற்ற பேப்பர்களும் கிடைக்கவில்லை என்றால் அவைகள் அனைத்தும் தொலைந்து விட்டதாக கருத வேண்டும்.

ராமலிங்கம்,
த/பெ. காலஞ்சென்ற லிங்கண்ணன்,
கதவு எண்.120, சத்தியவாணி முத்து நகர்,
காமாட்சி தெரு, வியாசர்பாடி,
சென்னை–600 039, செல்: 9789480159 / 9740391242

பொது அறிவிப்பு

இந்த பொது அறிவிப்பு மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் கதவு எண்.19/XI, சில்வர் ஆர்ச் அபார்ட்மெண்ட்ஸ், கவரைத் தெரு, சென்னை 600 026 என்ற முகவரியில் வசிக்கும் எனது கட்சிக்காரர் தி.விஜயகுமார், த/பெ.தில்லையம்பலம், திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், 95 எண், சோழவரம் புஞ்சை சர்வே எண். 150/2A– 0.73.5 ஏர்ஸ் அதாவது 1ஏக்கர் 82 சென்ட், இந்த சொத்தானது செய்யாறு பதிவு மாவட்டம், வெம்பாக்கம் சார் பதிவகம், 2345/2011 ஆவண எண்ணாக 29.08.2011 அன்று கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. இந்த சொத்திற்கு எனது கட்சிக்காரர் முழு உரிமையாளர் ஆவார்.

பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில் 2345/2011 பத்திரம் எண்ணாக 29.08.2011அசல் விற்பனை பத்திரத்தை எனது கட்சிக்காரர் கடந்த 3 மாதங்களுக்கு முன் ஏப்ரல் மாதம் 21ந் தேதி அன்று பழைய கதவு எண்.19/XI சில்வர் ஆர்ச் அபார்ட்மெண்ட்ஸ், முதல் தளத்திலிருந்து தரை தளத்திற்கு வீடு மாற்றும்போது மேற்குறிப்பிட்ட சொத்தின் அசல் பத்திரங்களை தவறவிட்டிருக்கிறார். அந்த அசல் பத்திரத்தைப் பற்றி எந்த நபருக்கேனும் தெரிய வந்தாலோ அல்லது ஏதேனும் உரிமை, அடமானம், பாத்தியதை பொறுப்பு அல்லது கோரிக்கை இருந்தாலோ அது குறித்து இந்த தேதியில் இருந்து 7 நாட்களுக்குள் கீழ்க்கையொப்பமிட்டவருக்கு அல்லது கீழே கூறியுள்ள எனது முகவரிக்கு தெரியப்படுத்துமாறு இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலே குறிப்பிட்ட 7 நாட்களுக்குள் எந்த உரிமை கோரல் அல்லது ஆட்சேபனையும் பெறப்படாவிட்டால், மேற்கூறிய பத்திரம் என். 2345,/2011, 29.08.2011 தேதியிட்ட அசல் விற்பனைப் பத்திரம் தொலைந்துவிட்டது அல்லது காணாமல் போய்விட்டது என்றும் மேலும் மேற்கண்ட சொத்திற்கு யாரிடம் இருந்தும் எந்தவித உரிமை கோரலும் பெறப்படவில்லை என்றும் கருத்தில் கொள்ளப்பட்டு மேற்கண்ட சொத்து தொடர்பாக எனது கட்சிக்காரர் எந்தவித பரிவர்த்தனையும் மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

K.ஜெயசங்கர் (வழக்கறிஞர்)
எண்.25,/47. கவரைத் தெரு, வடபழனி, சென்னை600 026.

கடன் தீர்ப்பாயம் -2 சென்னை
6 வது தளம், அடிஷ்னல் ஆபீஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு நுங்கம்பாக்கம், சென்னை 600 006
அசல் வழக்கு எண்166/2024

பாரத ஸ்டேட் வங்கி, ஆர்.ஏ.பி சென்டர்
எண் 97, ஏ எ. ஃ ப் பிளாக், 4வது அவென்யூ,
சாந்தி காலணி, அண்ணா நகர், சென்னை-600 040
வங்கி பிரதிநிதி முதன்மை மேலாளர் மற்றும்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி — மனுதாரர்

எதிர்

1. திரு. சு.தினேஷ் — பிரதிவாதி
2. திரு. செ.சுப்பிரமணியன்
3. ரியல் வேல்யூ ப்ரமோட்டர்ஸ் பிரைவேட் பெறுநர்
1. திரு. சு.தினேஷ், த/பெ. செ.சுப்பிரமணியன்
1-4F, சீர்ராஸ் பார்க், 6 ராதாகிருஷ்ணன் சாலை
வளசரவாக்கம், சென்னை-600 087.
பவர் ஆப் அட்டர்னி திரு. செ.சுப்பிரமணியன்
2. திரு. செ.சுப்பிரமணியன், த/பெ. செவிகவுண்டர்
1-4F, சீர்ராஸ் பார்க், 6 ராதாகிருஷ்ணன் சாலை
வளசரவாக்கம், சென்னை-600 087.
பவர் ஆப் அட்டர்னி திரு. சு.தினேஷ்
3. ரியல் வேல்யூ ப்ரமோட்டர்ஸ்
நிறுவனங்களுக்கான சட்டத்தின் பதிவுச் செய்யப்பட்டது சட்டம் 1956
ரெப் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
17/1, போயஸ் ரோடு, 2 வது தெரு, தேனாம்பேட், சென்னை 600 011.

மேற்கண்ட மனுதாரர் இந்த அசல் வழக்கை பிரதிவாதி மீது ரூபாய் 45,03,320/– வட்டி மற்றும் செலவுடன் தருமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேதகு பி.ஓ–2 பிரதிவாதிக்கு பத்திரிக்கை மூலம் அறிவிப்பு தருமாறு ஆணையிட்டுள்ளார். இதன் காரணமாக நீங்கள் வரும் 17/09/2024 பகல் 11 மணிக்கு மேற்கண்ட தீர்ப்பாயத்தில் நீங்களோ மற்றும் உங்களால் அனுமதிக்கப்பட்ட எந்த நபரோ அல்லது வழக்கறிஞரோ ஆஜர் ஆகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு தவறும்பட்சத்தில் உங்களுக்கு எதிராக தீர்ப்பு சாட்சிகளின்படி வழங்கப்படும்.

நடராஜன் கோபிநாத்
மனுதாரரின் வழக்கறிஞர்

விற்பனை அறிவிப்பு

இஏபி இன்பிராஸ்டிரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)
CIN : U45205TN2011PTC081758

திவால்நிலை மற்றும் நொடித்தல் தொகுப்பு, 2016–ன் கீழ் மின்னணு – ஏலம்

கார்ப்பரேட் கடனாளியான இஏபி இன்பிராஸ்டிரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் (கலைப்பில் உள்ளது) ("கார்ப்பரேட் கடனாளி") சொத்துக்கள் திவால்நிலை மற்றும் நொடித்தல் தொகுப்பு, 2016–ன் (கலைப்பு நடைமுறை) அட்டவணை I மற்றும் விதிகள் 32(b)–ன்படி https://bankauctions.in என்ற மின்னணு–ஏல இணையதளம் மூலம் மொத்த அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	விவரங்கள்	விவரங்கள்
1	வருங்கால ஏலதாரர் தகுதி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி (பொது அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்கள்)	14.09.2024 அன்று 4.00 மணி வரை
2	மின்னணு–ஏலத் தேதி மற்றும் நேரம்	27.09.2024, காலை 11.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்)

பிளாக் எண்.	சொத்துகள் விவரம்	ரிசர்வ் விலை	டேவணித் தொகை டெபாசிட்	ஏல அதிகரிப்பு மதிப்பு
A	மேக்வி டிரக், மினி டிரக் & மினி எக்ஸ்காவேட்டர் மொத்த விற்பனையில் உள்ளது. (சொத்துகள் தேதுமடந்த நிலையில் உள்ளன)	ரூ.3.2 லட்சம்	25 செப்டம்பர் 2024 அன்று மாலை 5.00 மணிக்குள் ரூ.32000/–	ரூ.5,000

1. மின்னணு–ஏலம் மூலம் **"உள்ளது உள்ளபடி, எப்படி உள்ளதோ அப்படியே, எந்தவித மாற்றமும் இல்லாமல்"** அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் மூலம் எந்த வகையான உத்தரவாதங்களும் இழப்பீடுகளும் இல்லாமல் விற்பனை செய்யப்படுகிறது.
2. மின்னணு–ஏல சேவை வழங்குனர் மெசர்ஸ் 4 குளோஷர்: https://bankauctions.in, மின்னணு–ஏல முகவர் சார்பாக தொடர்பு கொள்ள வேண்டிய நபர் திரு. தினேஷ்: (4 குளோஷர்), dinesh@bankauctions.in & info@bankauctions.in, மொபைல் எண். +91 8142000735 & 8142000066.
3. விற்பப்முள்ள ஏலதாரர்கள் மின்னணு–ஏல இணையதளம் https://bankauctions.in–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மின்னணு–ஏல நடைமுறை ஆவணங்களில் உள்ள தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கட்டாயமாக படித்து ஒப்புக்கொண்ட பிறகு பங்கேற்க வேண்டும்.

ஒப்பம்/– சந்திரசேகர் சாகுதூர்
M/s. இஏபி இன்பிராஸ்டிரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் கலைப்பு அலுவலர்
IBBI/IPA-001/IP-P00960/2017-18/11581
மின்னஞ்சல்: liquidatoreap@gmail.com
F4&F5, முதல் தளம், எண்.333/17,
எல்விபி சல்மா ஆர்கேட் வளாகம், கோடம்பாக்கம் மெயின் ரோடு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை 600 024, தமிழ்நாடு.
தேதி : 31 ஆகஸ்ட் 2024, இடம்: சென்னை

டைம்ஸ்கன் லாஜிஸ்டிக்ஸ் (இந்தியா) லிமிடெட்

TIMESCAN LOGISTICS
CIN: L60232TN2006PLC061351

பதிவு அலுவலகம்: எண்.18/3, ராஜா அண்ணாமலை கட்டிடம், அனெக்ஸ் 3வது தளம், ருக்மணி லட்சுமிபதி சாலை (மார்ஷல்ஸ் சாலை), எழும்பூர், சென்னை – 600 008.
மின்னஞ்சல் ஐடி : cs@timescan.in; இணையதளம் : www.timescan.in

18வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு, மின்–வாக்களிப்பு மற்றும் புத்தக மூடல் தகவல்

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 17/2020, அதனைத் தொடர்ந்து மே 05, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 20/2020, ஜனவரி 13, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2021 மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 02/2022, டிசம்பர் 28, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 10/2022 மற்றும் செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 09/2023 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் பிற தொடர்புடைய சுற்றறிக்கைகள் ('எம்சிஏ சுற்றறிக்கைகள்') மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா வெளியிட்ட 12 மே, 2020, ஜனவரி 15, 2021, மே 13, 2022, ஜனவரி 05, 2023 மற்றும் அக்டோபர் 07, 2023 தேதியிட்ட சுற்றறிக்கைகளும் ('செபி சுற்றறிக்கைகள்') வழங்கி உள்ள சில தளர்வுகளுக்கு இணங்க, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள அலுவல்களை பரிவர்த்தனை செய்ய டைம்ஸ்கன் லாஜிஸ்டிக்ஸ் (இந்தியா) லிமிடெட்டின் ('கம்பெனி') 18வது வருடாந்திர பொதுக்கூட்டம் (ஏஜிஎம்) புதன்